பக்கங்கள்:-23

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 26 | செவ்வாய்க்கிழமை | 09.07.2024 | அதிர்வு 343

அத்துருகிரிய துப்பாக்கிச்சூடு:

## 10 பொலிஸ் குழுக்கள் தீவிர விசாரணையில்

கொழும்பு மாவட்டத்தின் புறநகர் பகுதியான அத்துருகிரியவில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைக்கு 10 பொலிஸ் 06



போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட

# வடக்கு - கிழக்கை மையப்படுத்தி சர்வதேச கொடையாளர் மாநாடு

## சஜித்தின் திட்டம் அதுவாம் மன்னாரில் அவரே தெரிவிப்பு

(மன்னார் நிருபர்கள்)

"போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல மனித உயிர்கள் பலியாகியுள்ளன. போரின் பின்னர் இம் மாவட்டங்கள் அபிவிருத்தியின் விடியலைக் காணவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி அரசில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரிவுபடுத்தி, இதுவரை எந்தத் தலைவர்களும் தலைமைத்துவம் வழங்காத சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்த நாம் நடவடிக்கை எடுப்போம்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 06



## தமிழரசின் திருமலை மாவட்ட எம்.பியாக இன்று பதவியேற்கின்றார் எஸ்.குகதாசன்



(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக கதிரவேலு சண்முகம் குகதாசன் இன்று காலை நாடாளுமன்றத்தில் சபாநாயகர் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்யவுள்ளார். 06



சம்பந்தன் சகாப்தம் முடிந்து விட்டது. முற்றுப் புள்ளி வைத்தாகி விட்டது. இனி என்ன?

அடுத்த சுற்றுக் களேபரம் தொடங்கிவிடும். இதற்கு முன்னர் ஒரு சின்ன 'பிளாஷ்பாக்'.

குண்டுவெடிப்பில் நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டு விட்டார். அவரின் வாகனமும் உடலும் குண்டு வெடித்த இடத்தில் இருந்து அகற்றப்படவில்லை. அதற்கிடையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்பு அலுவலகத்தில் அந்தத் தேசியப் பட்டியல் வெற்றிடத்துக்கு புதிய எம்.பி. யார் என்று அக்கப்போர் தொடங்கிவிட்டது. முந்தியவர் பதவியைத் தட்டிக் கொண்டார். பிந்திய சம்பந்தன் கூட்டணி காரியாலயக் கதவைக் காலால் எட்டி உதைத்து விட்டு வெளியேற வேண்டியவரானார். அன்று அவசரப்பட்டு முந்தியமையால் அப்பதவியைப் பெற்றவர், கடந்த பொதுத் தேர்தலில் சற்று பிந்தி மெத்தனமாக இருந்ததால் அதைப் பறி கொடுத்து 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally




# 1700 ரூபாவுக்குத் தலைநகரை நோக்கி படையெடுக்கும் தொழிலாளர் சமூகம்!

(ஆ.ரமேஸ்)

1700 ரூபா நாட் சம்பளம் கோரி கொழும்பு – பம்பலப்பிட்டி நோக்கி பஸ் ஏறி படையெடுக்கும் தோட்டத் தொழிலாளர்கள் பெரும் போராட்டம் ஒன்றையும் நடத்தவுள்ளனர்.

இந்தப் போராட்டம் பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள பெருந்தோட்ட துறைமார் சங்கத்தின் தலைமை காரியாலயத் துக்கு முன் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒழுங்கு செய்துள்ளது என்று காங்கிரஸின் தோட்ட கமிட்டி தலைவர்கள் தெரிவித்தனர்.

அதேநேரத்தில் இந்தப் போராட்டம் 1700 ரூபா நாட் சம்பளம் தொடர்பில் பெருந்தோட்ட துறைமார் சங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேசமயத்தில் இந்தப் போராட்டத்தில் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள், தோட்ட கமிட்டிகள் எனப் பலரும் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# இலங்கையை வந்தடைந்தார் நடிகர் விஜய் தேவரகொண்டா





தென்னிந்திய பிரபல நடிகர் விஜய் தேவரகொண்டா படபிடிப்பிற்காக நேற்று இலங்கையை வந்தடைந்தார்.

“வி.டி.12“ திரைப்படத்தின் படப்பிடிப்பிற்காக அவர் இலங்கை வந்தடைந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின் றது.

ஆக்‌ஷன் த்ரில்லர் திரைப்படமாக உருவாகும் இப்படத் திற்குத் தற்காலிகமாக “வி.டி.12“ என பெயர் வைக்கப் பட்டுள்ளது.

கௌதம் தின்னனுரியின் இயக்கத்தில் உருவாக்கும் இப்படத்தின் முதற்கட்ட படப்பிடிப்புகள் நிறைவடைந்துள்ளன.

இலங்கை முழுவதும் பல்வேறு நகரங்களில் படக்குழு வினர் படப்பிடிப்பை நடத்த உள்ளனர்.

இதன்போது சில அதிரடி காட்சிகள் படமாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நித லையில் இலங்கை வந்த விஜய் தேவர கொண்டாவுக்கு பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.




# வடக்கு – கிழக்கு மீனவர் எவருக்கும் பொருத்து வீட்டுத் திட்டம் வேண்டாம்

## சீன அரசு தரமான திட்டங்களை வழங்க வேண்டும் என்கிறார் ரவீந்திரன்

(எஸ்.நிதர்ஷன்)

சீன அரசின் பொருத்து வீட்டுத் திட்டம் வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கு வேண்டாம் எனவும், நிரந்தர வீட்டுத் திட்டத்தை மீனவர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் யாழ். சுழிபுரம் அலைமகள் கடற்றொழிலாளர் கிராமிய கூட்டுறவு அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் கனகசபை ரவீந்திரன் கோரிக்கை விடுத்தார்.

யாழ். சுழிபுரத்தில் ஊடக சந்திப்பை நேற்று ஏற்பாடு செய்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போது சீன வீட்டுத் திட்டம் தொடர்பில் கடற்றொழிலாளர்களாக நாம் ஆராய்ந்து வருகின்றோம். ஆகவே, சீன அரசால் வழங்கப்படும் பொருத்து வீட்டுத் திட்டம் எமக்கு உகந்தது அல்ல. நாங்கள் கடற்கரையை அண்டித்தான் வாழ்ந்து வருகின்றோம். சூறாவளி காற்றால் அழியக் கூடும். இயற்கை அனர்த்தங்களுங்கு அஞ்சி வாழ வேண்டிய சூழல் ஏற்படும் .

ஆகவே, எங்களுக்குப் பொருத்தமற்ற இவ்வாறான வீட்டுத் திட்டங்களை முற்றிலும் நிராகரிக்கின்றோம்.

எமது கடற்றொழிலாளர்கள் போராலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தொடர்ந்து இழுவை மடியாலும் பாதிக்கப்பட்டுள்ளோம். பொதுமக்களுக்குப் பல நெருக்கடியான சூழலிலும் மீனவத் தொழிலை ஜீவனோபாயமாக மேற்கொண்டு வருகின்றோம்.

நாங்கள் கடந்த காலங்களில் சீன அரிசி வழங்கபட்டதாகவும் அறிகின்றோம். கடற்றொழில் மக்களுக்கு முழுமையாகவும் கிடைக்கப்பெறவில்லை. சிலர் இதில் இலாபம் அடைந்து கொண்டிருக்கின்றனர். அரசியல் ரீதியாக பலர் இலாபம் அடைகின்றனர். இன்றும் தரம் குறைந்த பொருள்கள் வருகின்றன.

மேலும், கடற்றொழிலாளர்களாகிய எமக்கு நிரந்தரமான வீட்டுத் திட்டம் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வழங்க வேண்டும்.

இழுவைமடியால் ஏற்கனவே எமது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தங்க நகைகளை அடைவு வைத்தே எமது குடும்பங்கள் முதலீடு செய்கின்றன.

வங்கியிலும் நகைகள் ஏலத்தில் விலைப்படுகின்ற சூழல் ஏற்படுகின்றது .எமது சுழிபுரம் கடற்கரையில் மக்கள் தொடர்ந்தும் பாதிக்கபடுகின்றனர்.

இவ்வாறான நேரத்தில் சமுர்த்தி நிறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மீனவர்கள் இன்னும் பாதிப்பை எதிர்கொள்ள பலர் இதனை அனுபவிக்கின்றனர்.

உண்மையில் எமக்கு இந்த சீன அரசு ஏமாற்றாது தரமான பொருட்களையும் திட்டங்களையும் வழங்க வேண்டும் .

வடக்கு, கிழக்கு கடற்றொழிலாளர்களுக்குச் சீன அரசு உதவி வழங்குகின்றது எனச் சொல்லுகின்றனர். இற்றை வரை எமது அலைமகள் கடற்றொழிலாளர்களுக்கு எந்த உதவியும் கிடைக்கப் பெறவில்லை.

அரிசி வருவதாகக் கூறினார்கள். அதிலும் தரப் பிரச்சினை அரசியல் ரீதியாக தங்களுடைய காரியாலயங்களில் வைத்து எங்களுடைய மக்களைப் பார்க்கவில்லை. அரசியல்வாதிகள், பொதுமக்களைக் கவனிக்க வேண்டும்.” – என்றார்.

# சாவகச்சேரி வைத்தியசாலை விவகாரம்: மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி



(எஸ்.நிதர்ஷன்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விவகாரம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் அமையும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ்.சார்ள்ஸ் ஆகியோருடனான கலந்துரையாடலில் இதனை வெளிப்படுத்தினார்.

மேலும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சுமுகமான சூழலை ஏற்படுத்துவதற்குக் குறித்த வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ள வைத்தியர் அர்ச்சுனா இராமநாதனுக்கு விடுமுறை வழங்குவதுடன், பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள வைத்தியர்களை மீளவும் கடமைக்குத் திரும்பச் செய்து வைத்தியசாலையின் செயற்பாடுகளை முதற்கட்டமாக ஆரம்பிப்பது.

பின்னர், விசாரணைக் குழு ஒன்றை நியமித்து, வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகள், அவை நீண்டகாலமாக நிவர்த்தி செய்யப்படாமைக்கான காரணம் மற்றும் வைத்தியர் அர்ச்சுனா தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் போன்றவை தொடர்பாக விரிவான விசாரணைகளை மேற்கொண்டு, அதனடிப்படையில் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளுவது தொடர்பாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் இதன்போது தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# திருடர்களின் சதி முறியடிக்கப்படும்!

## கம்பஹா கூட்டத்தில் சஜித் சூளுரை

அரசமைப்பில் உள்ள ஓட்டைகள் ஊடாக பதவியைத் தக்கவைத்துக்கொள்ள தற்போதைய ஜனாதிபதிக்கு வாய்ப்பில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கம்பஹாவில் நநடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசமைப்பில் உள்ள ஓட்டைகளை ஆராய்வதைத் தற்போதைய ஜனாதிபதியின் சீடர்கள் கடமையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

தற்போதைய ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை என்பது கிடையாது.

அவர் திருடர்களைப் பாதுகாக்கும் பணிகளையே முன்னெடுத்துள்ளார்.

சிலருக்கு அதிகாரம் இல்லாமல் உறக்கம் வருவதில்லை.

அவ்வாறானவர்கள் பல சதிகளை முன்னெடுத்து ஆட்சியைத் தக்க வைக்க முயல்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்திக்கு அவ்வாறான எந்தத் தேவையும் இல்லை.

எமக்குத் திருடர்களுடன் எந்தக் கொடுக்கல் வாங்கலும் இல்லை.

மக்களின் சக்தியே எமது பலம். திருடர்களின் சதிகள் முறியடிக்கப்படும்.” – என்றார்.













# நீர் விநியோகத்தை வெட்டியதற்கு எதிராகவும் மக்கள் போராட்டம்!

(த.சுபேசன்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனா தங்கியிருந்த வைத்தியசாலை விடுதியில் நீர் விநியோகம் தடைப்பட்டதால் அமைதியாக போராடிய மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனாவிற்கு ஆதரவளித்து திங்கட்கிழமை பொதுமக்கள் போராடி வந்த நிலையில் வைத்தியர் அர்ச்சுனா சுகயீன விடுமுறையில் விடுதி அறையில் தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில் வைத்தியரின் விடுதி அறைக்கான நீர் விநியோகம் தடைப்பட்டிருந்த நிலையில் அதனை அவர் தனது முகநூல் பக்கத்தில் பதிவேற்றியிருந்தார். இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் ஏ9வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் விரைந்து செயற்பட்ட பொலிஸார் வைத்தியரின் விடுதிக்கான நீர் விநியோகத்தை பெற்றுக்கொடுத்த பின்னரே மக்கள் வீதி மறியல் போராட்டத்தைக் கைவிட்டிருந்தனர். நீர் தொட்டியில் நீர் தீர்ந்து போனமை காரணமாகவே வைத்தியரின் விடுதிக்கான நீர் விநியோகம் தடைப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.





# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இப்போது அவலப்பட்டு நிற்கிறார். முன்னர் பிந்தியாதால் அதைப் பறிகொடுத்த சம்பந்தன், கடைசிப் பொதுத் தேர்தல் முடிந்த போது முந்திக் கொண்டு காய் நகர்த்திப் பழி தீர்த்துக் கொண்டார் என்று சொல்லலாம்.

இப்போது அதை ஏன் குறிப்பிடுவான் என்று கேள்வி எழுகின்றது.

சம்பந்தன் ஐயா இறந்து இரண்டாம் நாள். அவரது பூதவுடல் கொழும்பு மலர்ச்சாலைக்குக் கொண்டு வந்து வைத்து, பெட்டியைத் திறக்கின்றார்கள். அப்போது அங்கிருந்த தமிழரசு எம்.பி. ஒருவரின் கைத்தொலைபேசிக்கு அழைப்பு வருகிறது. அழைப்பு எடுத்தவரும் ஓர் எம்.பி. இருவரும் பேசிக்கொண்ட விடயம் என்ன தெரியுமா? அடுத்த நாடாளுமன்றக் குழு தலைவராக நான் நிற்கிறேன், தம்பியின் ஆதரவு கிடைக்குமா என்பதுதான்...!

சரி. இனி, விடயத்துக்கு வருவோம். நாடாளுமன்றக் குழு தலைவர் பதவி தமக்கு வேண்டுமென்று களத்தில் ஒற்றைக் காலில் பிடிவாதமாக நிற்கின்றார் செல்வம் எம் பி.

எம்.பிக்கள் நிலையில் சம்பந்தனுக்கு அடுத்த சீனியர் தாமே என்பதுதான் அவரது வாதம். அது உண்மைதான்.

இவ்வளவு காலமும் – கடந்த நாடாளுமன்ற காலத்திலும் – கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தான். அவரின் பிரதிநிதியாக – அவரது நம்பிக்கைக்குரியவராக – சுமந்திரனே அந்தப் பணியை ஆற்றினார்.

தலைவர்களின் கூட்டத்தில் காரசாரமாக விவாதித்து, சண்டை பிடித்து, பல காரியங்கள் ஆற்ற வேண்டிய பணி இது. வெளி உதவியாளர் யாரையும் கூட்டிச் சென்று செய்யக்கூடிய வேலை அல்ல. நாடாளுமன்றத்தில் நீண்ட காலம் இருந்தமை அல்லது சேர்விஸ் கூடிய சீனியர் எம்.பி. என்ற தகுதியெல்லாம் இதற்கு உதவாது. ஆங்கிலம், சிங்களம் இரண்டிலும் வாதாடி, விடயங்களை நகர்த்தும் தனித்திறன் வேண்டும். அத்தகைய முக்கிய பொறுப்பு இது.

அந்தத் தகுதி தமக்கு இருப்பதாகக் கூறி, ஆகவே தன்னை அப்பதவிக்கு தெரிவு செய்ய வேண்டும், அதற்காக நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தைக் கூட்டுங்கள் என்றெல்லாம் வலியுறுத்தி வருகின்றார் செல்வம் எம்.பி.

இது தொடர்பில் சார்ள்ஸ் நிர்மலநாதன், சுமந்திரன் ஆகியோரிடமும் தொலைபேசியில் அவர் ஆதரவு கோரிப் பேசியிருக்கின்றார் எனத் தெரிகின்றது. ஆனால் ஆக்கபூர்வமான பதில் கிடைக்கவில்லை என்ற கவலை அவருக்கு.

இன்னும் மூன்று மாதத்தில் ஜனாதிபதி தேர்தல். அது முடிந்ததும் பெரும்பாலும் இந்த நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விடும். அதற்குள் ஏன் புதிய நாடாளுமன்றக் குழு தலைவர் என்று இழுபறி, சுமந்திரனே அந்தப் பொறுப்பை தொடர்ந்து நடத்தி முடிக்கட்டும் என்ற எண்ணம் தமிழரசுக் கட்சி வட்டாரத்தில் உண்டு.

சிறிதரன் எம்.பியின் நிலைப்பாடு என்ன என்பது தெரியவில்லை. சுமந்திரனிடம் அப்பொறுப்பு நீடிக்க விடக்கூடாது என்று கருதி, அந்தப் பொறுப்புத் தமக்கு வேண்டும் என்றோ அல்லது செல்வத்துக்கு வழங்க வேண்டும் என்றோ அவர் முடிவெடுக்கக் கூடும். அவர் திருவாய் மலர்ந்தால்தான் விடயம் தெரியவரும்.

ஆயினும், இந்தப் பதவியை செல்வத்துக்கு விட்டுக் கொடுப்பதில் தமிழரசு எம்.பிக்கள் அறுவருள் பெரும்பான்மையோருக்கு விருப்பம் இல்லை என்பது உறுதியாகத் தெரிகின்றது.

1. இது தமிழரசு நாடாளுமன்ற குழு தலைவர் பதவி. தமிழரசு சார்பிலேயே செல்வம் எம்.பியாக இருக்கின்றார்.

2.தமிழ்க் கூட்டமைப்பு என்று ஒன்று இப்போது இல்லை என அண்மைக்காலமாக அடிக்கடி கூறி வந்தவர் செல்வம் தான். அத்தகையவருக்கு அந்தப் பதவியை விட்டுக் கொடுக்க தமிழரசுக் கட்சி இணங்க வாய்ப்பில்லை.

3.சம்பந்தன் இறந்த இடத்துக்கு, தமது கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் புதிய தலைவர் யார் என்பதை சபாநாயகருக்கு அறிவிக்கும் பொறுப்பு தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கத்தின் கடமை. நாடாளுமன்றக் குழுவின் முடிவாக செல்வம் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் தமிழரசு கட்சியின் அரசியல் குழு, மத்திய குழு போன்றவற்றின் கலந்தாலோசனையின்றி அந்த முடிவை சத்தியலிங்கம் சபாநாயகருக்கு அறிவிப்பாரா என்பதும் சந்தேகமே.

4. ஏற்கனவே தமிழரசுக் கட்சியுடன் கொள்கை ரீதியாக பல விடயங்களில் எதிரும் புதிருமான நிலைப்பாடு எடுத்து விட்டார் செல்வம். உதாரணத்துக்குத் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை அவரும், அவரது கட்சியினரும், புளொட் உட்பட்ட அவரின் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் முழுமையாக ஆதரித்து நிற்கின்றனர். தமிழரசு முற்றாக அதை எதிர்க்கின்றது. அப்படி முரணிலை எடுத்து நிற்பவரை, இந்தத் தேர்தல் சமயத்தில் தனது கட்சியின் பெயரில் நாடாளுமன்றக் குழுத் தலைவராக இடமளித்தால், அது பல குளறுபடிகளுக்கு வழி செய்யும் என்று அஞ்சும் தமிழரசு அதற்கு இடமளிக்காது.

5. அந்தப் பதவியை செல்வத்துக்கு அளிப்பதில் சார்ள்ஸ் நிர்மலநாதன், சாணக்கியன், சுமந்திரன், கலையரசன் போன்றோர் விரும்பவில்லை என்று தெரிகிறது. சிறிதரன், இன்று எம்.பியாகப் பதவியேற்கும் குகதாசன் ஆகியோரின் நிலைப்பாடு தெரியவில்லை. தமிழரசு கட்சியின் அரசியல் குழுவோ, மத்திய குழுவோ, ஒரு முடிவு எடுத்தால் அதற்கு சிறிதரனும், குகதாசனும் மட்டுமல்லர், மற்றைய நால்வரும் கூடக் கட்டுப்படுவர் என்பது திண்ணம்.

6. கடந்த ஜனவரியில் நடந்த தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவில் சிறிதரன் வென்றார் என அறிவிக்கப்பட்ட போது, சுமந்திரன் அதை ஏற்று, சிறிதரனை வாழ்த்தியிருந்தார். அவருக்கு முழு ஒத்துழைப்பு நல்குவார் எனப் பகிரங்கமாக உறுதிமொழியும் வழங்கியிருந்தார். அந்தத் தலைமைப் பதவியை அன்று சிறிதரன் ஏற்றிருந்தால், இப்போது இந்த நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியையும் சிறிதரனுக்கு வழங்கி, சம்பந்தனின் சார்பில் அந்தப் பணியைத் தான் முன்னெடுத்துச்செல்வது போல, இப்போது சிறிதரன் சார்பில் அந்த வேலையை சுமந்திரனே தொடர்ந்திருப்பார்.

இன்றுதான் நிலைமை மாறிவிட்டதே...! சுமந்திரன் கட்சித் தலைவர் கூட்டத்தில் ஒரு முடிவு எடுத்துவிட்டு வர, சிறிதரன் அதைப் பகிரங்கமாக விமர்சிக்க கூடிய ஒட்டுறவுதான் இப்போது உள்ளது.

இனி என்ன...? நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவிக்கான களேபரம் தொடங்கிவிடும். இவ்விடயத்தில் சைலண்டாகக் காய் நகர்த்துவார் சித்தார்த்தன்.

இன்னும் சில மாதங்களே இப்பதவிக்கு இருப்பதால், தமிழரசுக் குடும்பத்தின் வழித்தோன்றல் சித்தார்த்தனுக்கு இந்தப் பதவியை விட்டுக் கொடுக்க தமிழரசு இணங்கினாலும், செல்வத்துக்கு அதை அளிக்க இணங்குவது முயல் கொம்பு தான்....!

# 10 பொலிஸ் குழுக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பிரபல வர்த்தகர் சுரேந்திர வசந்த உள்ளிட்ட 2 பேர் கொல்லப்பட்டதுடன், பிரபல சிங்களப் பாடகி சுஜீவா உள்ளிட்ட 4 பேர் காயமுற்றனர்.

மேற்படி தாக்குதல் வெளிநாடொன்றில் இருந்து திட்டமிட்டு வழிநடத்தப் பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் பயன்படுத்திய இரண்டு வாகனங்கள் இருவேறு இடங்களிலிருந்து மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு - கிழக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் கீழ், 297 ஆவது கட்டமாக ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன வன்னி, மன்னார் புனித ஜோசப் கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதன்போது, பாடசாலை நூலகத்துக்குத் தேவையான ஆங்கில நூல்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்கு பாடசாலை அபிவிருத்தி நிதியத்திற்கு நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த உதவிகளைப் பெற்று, வடக்கு, கிழக்கு இரு மாகாணங்களை மையமாகக் கொண்டு, முழு நாட்டையும் உள்ளடக்கிய வகையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுப்போம். இன, மதம், சாதி, வர்க்கம், கட்சி வேறுபாடின்றி 41 இலட்சம் பிள்ளைகளினது நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் பாதுகாத்துத் தருவோம்.

வடக்கு மாகாணம் இதுவரை மாற்றாந்தாய் கவனிப்பையே பெற்று வந்தது. இந்த யுகத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, இந்த மாகாணத்தின், இந்த மாவட்டத்தின் அபிவிருத்தி யுகத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்போம்.

பாடசாலை மாணவர்களைப் பாதுகாத்து போஷித்து பக்க பலத்தை வழங்க ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வியலாளர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், ஆசிரியர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்விசாரா ஊழியர்கள் போன்றோர் சிறப்பான பணியை ஆற்றி வருகின்றனர். இவர்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு இவர்களுக்கும் முழு உரிமைகளுடன் கூடிய புதிய கல்வி முறைக்கு வலுவூட்டத் தேவையான அதிகபட்ச பக்கபலத்தை வழங்க நடவடிக்கை எடுப்போம்.

எமது நாட்டு கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு மீனவ சமூகத்தால் எமது மீனவ சமூகத்தினர் பாரிய பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இந்தப் பிரச்சினைகள் குறித்தும் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் கலந்துரையாடி தொடர்ச்சியாக நிலவி வரும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வழங்கப்படும்." - என்றார்.

இந்த நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு மாகாண பிரதான ஒருங்கிணைப்பாளர் திருமதி உமாசந்திரா பிரகாஷ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# தமிழரசின் திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

காலஞ்சென்ற பெருந்தலைவர் இரா.சம்பந்தனின் மறைவால் ஏற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்துக்குக் குகதாசனின் பெயர் கடந்த 2ஆம் திகதி நியமிக்கப்பட்டு, அரச வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது.

# பெருந்தலைவர் சம்பந்தன் அவர்களுக்குக் கண்ணீர் அஞ்சலி



Date: Saturday, July 13, 2024

Time: 4:30 - 8:00 pm

Venue: Malvern Family Resources Center
90 Littles Road, Scarborough (Sewells & Morningside)

திருகோணமலை மாவட்டத்தில் ஐந்துமுறை வென்ற மக்கள் பிரதிநிதி, இலங்கைத் தமிழரசு கட்சியின் மூத்த உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெருந்தலைவர், இலங்கை நாடாளுமன்றத்தில் மூன்றாண்டு காலம் ஆளுமை மிக்க எதிர்கட்சித் தலைவர், அரைநூற்றாண்டு காலமாக தமிழ் ஈழ அரசியலில் பேராளுமையாக விளங்கியவர் இராசவரோதயம் சம்பந்தன் ஐயா அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் பொதுக் கூட்டம்.

தேசத்தை நேசிப்போரின் அஞ்சலி உரைகள் இடம்பெறும்

கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
647-763-9410 / 416-281-1165 / 416-998-2284

கனடிய தமிழர் பேரவை
416-240-0078 / 647-300-1973



Build Your Dream Home with us....

NORTH WALL
ENGINEERING

"Experience a professional service like no other"

Our Services:

- Architectural Designing
- Structural Planning
- 2D & 3D Drawing
- BOQ Assessment
- Interior Designing
- Landscaping

For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766

Nelliyady, Jaffna.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நீதி பிழைத்தது - II

ஒரு நாட்டில் ஜனநாயக ஆட்சி நிலவ வேண்டும் என்றால் மிகப் பிரதானமானது ஒழுங்கு முறையான தேர்தல்கள்தான்.

காலக்கிரமத்தில் - உரிய வேளைகளில் - பிற தலையீடுகள், அழுத்தங்களின்றி - பக்கச் சார்பின்றி - நடுநிலையாக - நீதி, நேர்மையாக - தேர்தல்கள் நடத்தப்பட்டால்தான் அந்த நாட்டில் ஜனநாயகம் நிலவுகின்றது என்று நம்பலாம்.

இலங்கையில் ஜனநாயக அடிப்படையில், முறையாகவும், ஒழுங்காகவும், சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் தேர்தல்கள் நடத்தப்படுவதற்காக சுதந்திரத் தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் மூலமும் சட்டங்களின் வாயிலாகவும் அதற்கு அதிகாரங்கள், வலிமைகள், உரிமைகள், வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் தேர்தல் ஆணையம் தனியாக அந்த அதிகாரங்களைப் பிரயோகிக்க முடியாது. அதற்குப் பின்புல ஆதரவுகள், ஒழுங்குகள், சட்டரீதியாகக் கிடைக்க வேண்டும்.

அரசு கட்டமைப்பின் ஒவ்வொரு அங்கத்தில் இருந்தும் - அதற்கு - தேர்தல் ஆணையத்துக்கு-ஒத்துழைப்புக்கிட்ட வேண்டும். கிராம சேவையாளரிலிருந்து மாவட்ட அரச அதிபர் வரை - பொலிஸ் நிலையங்களிலிருந்து பொலிஸ்மா அதிபர் வரை - தேர்தல் ஆணையம் தன் பணியை முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்புக் கிடைக்க வேண்டும்.

சட்டத்தின் ஆட்சி நிலைநிறுத்தப்படுவதில் முக்கிய பங்காற்றும் நீதித்துறையிடமிருந்தும் கூட முக்கிய பங்களிப்பு கிட்டினால் தான் தேர்தல் திணைக்களம் தனது பணியை சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் ஆற்றித் தனது ஜனநாயகக் கடமையைச் செவ்வனே முன்னெடுக்க முடியும்.

வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நேற்று உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவு ஒன்றின் மூலம் நீதி - நேர்மையான தேர்தல்கள் நடைபெறுவதை உறுதிப்படுத்துவது தொடர்பில் தனது பங்களிப்பை உயர்நீதி மன்றம் அளித்திருப்பதாகக் காட்டப்படுகின்றது. கவனிக்கவும் 'காட்டப்படுகிறது' என்றே குறிப்பிடுகிறோம்.

அதனால் நேற்று மாலை இப்பத்தியில் 'நீதி பிழைத்தது' என்ற தலைப்பில் அந்த உத்தரவை சிலாகித்துப் பாராட்டினோம்.

ஆனால் இந்த அணுகுமுறை ஜனாதிபதி தேர்தல் விடயத்தில் மட்டும்தான். அங்கு நீதி தப்பி பிழைத்தது. அதனால் நீதி பிழைத்தது என்றோம்.

ஆயினும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அந்தத் தேர்தல் கடந்த ஒன்றரை வருடங்களாக நடத்தப்படவில்லை. இழுபடுகின்றது. அதற்கு இலங்கையின் நீதித் துறையின் மெத்தனம்தான் பிரதான காரணம் என்பது அப்பட்டமான உண்மை. அதை வெளிப்படுத்துவது நீதிமன்றத்தின் சீற்றத்துக்கு உள்ளாகும் விடயம் என்றாலும் உண்மையை யாராவது வெளிப்படையாகக் கூறித் தானாக வேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் விடயத்தில் நீதி தப்பி பிழைத்தது என்றால் உள்ளூராட்சித் தேர்தல் விடயத்தில் நீதி பிழைத்தே போயிற்று. அதனால் இங்கும் நீதி பிழைத்தது.

உள்ளூராட்சி தேர்தல் இவ்வளவு காலம் நடைபெறாமல் இழுபடுவதற்கு ஒரே காரணம்தான். வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டு, ஒரு பகுதி வாக்குச் சீட்டுகளும் அச்சிடப்பட்டு விட்ட நிலையில், தேர்தலுக்கான மிகுதி நிதி சுமார் ஆயிரம் கோடி ரூபாவை அனுமதிக்காமல் பிடித்து வைத்திருக்கின்றார் நிதி அமைச்சருமான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

பதவியில் இருக்கும் ஜனாதிபதி என்ற முறையில் அவருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுப்பதில் சில சிக்கல்கள் உண்டு. ஜனாதிபதிக்கு சில சட்ட விலக்களிப்பு அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அமைச்சர் என்ற முறையில் அவர் ஆற்றுகின்ற அல்லது ஆற்றத் தவறுகின்ற கருமங்களில் அந்த சட்ட விலக்களிப்பு காவல் - பாதுகாப்பு - அவருக்குக் கிடையாது. நிதி அமைச்சர் என்ற முறையில் நாட்டின் தேர்தல்களை - மக்களின் வாக்களிக்கும் உரிமையை - ரணில் விக்கிரமசிங்க சூறையாடி உள்ளார். அது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்காமல் - 'தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும்' என்ற நீதித்துறையின் அடிப்படைக் கோட்பாட்டை மறந்து - இலங்கையின் மீயுயர் நீதிமன்றமான உயர் நீதிமன்றம் பொறுப்பற்று செயல்படுவது அப்பட்டமாக வெளித் தெரிகின்றது.

சட்ட - ஜனநாயக ஆட்சிக்குக் கலங்கரை விளக்கமாக இருக்க வேண்டிய தரப்புக்களே, இந்த விடயத்தில் களங்கப்பட்டு போய் நிற்கின்றன. அதுதான் நாட்டின் பேரவலம்.



# கனமழையால் வெள்ளம் அனர்த்தம்: மும்பை, அசாம் மாநிலங்கள் பாதிப்பு

கனமழை காரணமாக இந்தியாவின் மும்பை நகரத்தில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்தவகையில், நேற்று முன்தினம் இரவு தொடங்கி நேற்று காலை 7 மணி வரை மும்பையில் கனமழை பெய்துள்ளதாக மும்பை நகராட்சி மன்றம் தெரிவித்துள்ளது.

நகரின் சாலைகளும் தொடருந்து தண்டவாளங்களும் வெள்ளத்தில் மூழ்கியதை அடுத்து, அங்குள்ள சில பள்ளிகளும் கல்லூரிகளும் மூடப்பட்டுள்ளன.

மும்பையில் தொடர்ந்து கனமழை எதிர்பார்க்கப்படுவதாக இந்திய வானிலை மையம் எச்சரித்துள்ள நிலையில், வெள்ளம் மோசமடைந்து மேலும் பல பகுதிகள் கடுமையாகப் பாதிப்படையக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

குறிப்பாக, வெள்ளம் காரணமாக நேற்று மும்பையில் உள்ள விரைவுச்சாலைகளில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதுடன், சில தொலைதூர ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டன என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்தநிலையில், கனமழை காரணமாக இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அசாமில் உள்ள ஆறுகள் நிரம்பி வழிந்ததன் காரணமாக அப்பகுதிகளில் வெள்ளம் கரை புரண்டோடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் விளைவாக 2 மில்லியனுக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்த நாட்டு அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.














# ‘உங்கள் சகோதரனாக வந்துள்ளேன்’; மணிப்பூர் மக்களுக்கு ராகுல் ஆறுதல்

“நான் மணிப்பூர் விவகாரத்தை அரசியலாக்க விரும்பவில்லை. இங்கே இப்போது தேவை அமைதி மட்டுமே. வன்முறை அனைவரையும் பாதித்துள்ளது. மணிப்பூர் மக்களிடம் நான் ஒன்றை தெரிவிக்க விரும்புகிறேன். நான் இங்கே உங்கள் சகோதரனாக வந்துள்ளேன்.”

– இவ்வாறு மணிப்பூரில் காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தெரிவித்தார்.

அசாமில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்த மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, அங்கிருந்து விமானம் மூலம் மணிப்பூர் தலைநகர் இம்பாலா சென்றடைந்தார்.

பின்னர் அங்கிருந்து சாலை மார்க்கமாக சுராசந்தபூர் சென்ற அவர் அங்கு வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி,

“மணிப்பூரில் பிரச்சினை தொடங்கிய பிறகு நான் இங்கு வருவது இது மூன்றாவது முறை. இது ஒரு மிகப்பெரிய துயரம். மணிப்பூர் சூழலில் முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்த்தேன். ஆனால் அப்படி குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் இல்லாதது ஏமாற்றம் தருகிறது.

நாங்கள் மணிப்பூர் பிரச்சினை குறித்து ஆளுநருடன் உரையாடினோம். எங்களால் முடிந்த உதவியை செய்ய விரும்புகிறோம் என்றும் அவரிடம் தெரிவித்தோம். எங்களின் அதிருப்தியை வெளிப்படுத்தியதோடு, இங்கு நிலவும் சூழல் குறித்து நாங்கள் மகிழ்ச்சியடையவில்லை என்றும் அவரிடம் கூறினோம்.

நான் இந்த விவகாரத்தை அரசியலாக்க விரும்பவில்லை. இங்கே இப்போது தேவை அமைதி மட்டுமே. வன்முறை அனைவரையும் பாதித்துள்ளது. மணிப்பூர் மக்களிடம் நான் ஒன்றை தெரிவிக்க விரும்புகிறேன். நான் இங்கே உங்கள் சகோதரனாக வந்துள்ளேன். உங்களுக்கு உதவி செய்யும் ஒருவனாக வந்துள்ளேன். மணிப்பூரில் மீண்டும் அமைதியை நிலைநாட்ட விரும்புபவனாக வந்துள்ளேன்.

இங்கு அமைதியை மீண்டும் கொண்டு வர தேவையான அனைத்தையும் காங்கிரஸ் உங்களுக்கு செய்ய தயாராக உள்ளது. நான் எத்தனை முறை இங்கே வரவேண்டும் என்று நீங்கள் விரும்பினாலும் நான் இங்கே மகிழ்ச்சியுடன் வந்து உங்களோடு பேச விரும்புகிறேன்.

இந்திய ஒன்றியத்தின் பெருமை மிகு மாநிலம் மணிப்பூர். இங்கே எந்த பிரச்சினையும் இல்லையென்றாலும் கூட பிரதமர் இங்கே வந்திருக்க வேண்டும். இந்த மிகப் பெரிய துயரத்தின் நடுவே பிரதமர் ஓரிரு நாள் இங்கே வந்து இந்த மக்களின் குறைகளை காதுகொடுத்து கேட்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறேன்.” – என்றார்.

# ஜப்பானில் சக்தி வாய்ந்த நில அதிர்வு




ஜப்பானில் சக்தி வாய்ந்த நில அதிர்வு ஒன்று உணரப்பட்டுள்ளது.

இந்த நில அதிர்வானது மேற்கு ஒகசவாரா தீவுகளில் நேற்று காலை 5.02 மணியளவில் உணரப்பட்டதாக அந் நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது ரிக்டர் அளவு கோலில் 6.3 மெக்னிடியூட்டாக பதிவாகியுள்ளது.

மேற்கு ஒகசவாரா தீவுகளுககு அப்பால் 530 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நில அதிர்வினால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நில அதிர்வினால் ஏற்பட்ட உயிர் மற்றும் பொருள் சேதங்கள் தொடர்பில் விபரங்கள் ஏதும் வெளியாகவில்லை.





# உக்ரைனில் வைத்தியசாலை மீது ரஷ்யா தாக்குதல்; பலர் உயிரிழப்பு

உக்ரைன் தலைநகரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனை ஒன்று நேற்று காலை ரஷ்ய இன்று காலை ரஷ்ய ஏவுகணையால் தாக்கப்பட்ட ஓக்மடிட் குழந்தைகள் மருத்துவமனை விடுதியில் சுமார் 20 குழந்தைகள் சிகிச்சை பெற்று வருவதாக மருத்துவமனை அதிகாரிகள் உக்ரைனிய ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர்.

ஏவுகணைத் தாக்குதலில் கடுமையாக சேதமடைந்துள்ளது.

உக்ரைனின் மிகப்பெரிய ஓக்மடிட் குழந்தைகள் மருத்துவமனை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு பெரியவர்கள் உட்பட உக்ரைன் முழுவதும் நடத்தப்பட்ட தாக்குதல்களில் குறைந்தது 31 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று காலை ரஷ்ய ஏவுகணையால் தாக்கப்பட்ட ஓக்மடிட் குழந்தைகள் மருத்துவமனை விடுதியில் சுமார் 20 குழந்தைகள் சிகிச்சை பெற்று வருகின்றனர் என மருத்துவமனை அதிகாரிகள் உக்ரைனிய ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர்.

# பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தல் ஆட்சியமைப்பதில் சிக்கல்

பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தலில் இடதுசாரி கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ள நிலையில், எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெறாமையால் ஆட்சியமைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜுன் மாதம் 30 ஆம் திகதி பிரான்ஸில் இடம்பெற்ற முதற்கட்ட நாடாளுமன்ற தேர்தலில் தீவிர வலதுசாரிக் கட்சியான தேசியப் பேரணி முன்னிலை பெற்றது.

இந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இறுதிக் கட்ட தேர்தலில் பதிவான வாக்குகளின் முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன.

அதில், இடதுசாரி கூட்டணி 180 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

அதேநேரம், வலதுசாரி கூட்டணி 3 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோனின் செண்ட்ரிஸ்ட் கட்சி 160 ஆசனங்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

பிரான்ஸ் நாடாளுமன்ற தேர்தலில் பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்பதற்கு 289 ஆசனங்களை பெறவேண்டும்.

எனினும், இந்தத் தேர்தலில் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மையான ஆசனங்களை கைப்பற்றாததால் தற்போது தொங்கு நாடாளுமன்றம் உருவாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.









# வவுனியா பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் பதவி ஏற்பு

(கே.வசந்தன்)

வவுனியா பல்கலைக்கழகத்தின் இரண்டாவது துணைவேந்தராக பேராசிரியர் அருளம்பலம் அற்புதராஜா நேற்றுத் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

வவுனியா பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் உட்பட பல்கலைக்கழக கல்வி சார் உத்தியோகத்தர்கள் புடைசூழல் மங்கள வாத்திய இசையோடு அழைத்துவரப்பட்ட புதிய துணைவேந்தர் அருளம்பலம் அற்புதராஜா ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தைக் கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டிருந்தார்.

வவுனியா பல்கலைக்கழகத்தின் பதிவாளர் நடராஜா ராஜவிசாகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் பல் கலைக் கழகத்தின், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் தம்பு மங்க ளேஸ்வரன் மற்றும் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், கல்வி சார்ந்த ஊழியர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# நுவரெலியாவில் பயிரிடப்பட்ட ஸ்ட்ராபெரி செய்கை வெற்றி

ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு நுவரெலியாவில் பயிரிடப்பட்ட ஸ்ட்ராபெரி செய்கை வெற்றியளித்துள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மாதிரி செய்கை அரச அனுசரணையில் முன்னெடுக்கப்படும் முதலாவது திட்டமாகும்.

நுவரெலியாவின் பிளாக்பூல் பகுதியில் 52 விவசாயிகளின் பங்களிப்புடன் 40 பசுமை இல்லங்களில் இந்த பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோதமாக மாணிக்கக் கற்கள் தோண்டிய மூவர் நோர்வூட்டில் கைது

நுவரெலியா பிரதேசத்தில் நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோத மான முறையில் மாணிக்கக் கல் அகழ்வு பணியில் ஈடுபட்ட மூன்று சந் தேகநபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என நோர் வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

நோர்வூட் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நோர்வூட் பிரதேசத்தைச் சேர்ந்த 32, 33 மற்றும் 47 வயதுடைய மூன்று நபர்களே கைது செய்யப்பட்டுள்ள னர்.

சந்தேக நபர்களிடமிருந்து மாணிக் கக் கல் அகழ்வு பணிக்கு பயன்படுத்தப் படும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள் ளன எனப் பொலிஸார் தெரிவித்த னர்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கான சீனாவின் அரிசியும் வந்து சேர்ந்தது

(ந.லோகதயாளன்)

வடக்கு - கிழக்கு மீனவர்களிற்கான சீனாவின் பொருத்து வீடுகளைத் தொடர்ந்து அரிசியும் நேற்று மாவட்டங் களிற்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

சீன அரசினால் வடக்கு - கிழக்கு மீனவர்களிற்காக வழங்கப்பட்ட 500 பொருத்து வீடுகள் அடங்கிய பெட்டிகள் கெண்டெயினர்கள் மூலம் ஏற்கனவே எடுத்து வரப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து 50 கிலோவாக பொதி செய்யப்பட்ட அரிசியும் நேற்று முதல் எடுத்து வரப்படுகின்றது. இதற்க மைய யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு ஒதுக்கிய 7 ஆயிரத்து 436 மூடைகளில் 2 ஆயிரத்து 200 மூடை அரிசி நேற்று எடுத்து வரப்பட்டு குருநகரில் களஞ் சியப்படுத்தப்பட்டது.

இவ்வாறு களஞ்சியப்படுத்தப்படும் அரிசியுடன் ஏனைய அரிசிகளும் மாவட் டத்திற்கு கிடைத்தவுடன் எதிர் வரும் 13ஆம் திகதி இவை மீனவர்களிற்கு வழங்கப்படவுள்ளது.



# இரசாயனக் கழிவுகளை அகற்ற 5 மில்லியன் டொலர் நிதி உதவி

இலங்கையில் இரசாயன கழிவுகளை அகற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சுற்றாடல் அமைச்சுக்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்திற்கும் 5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை உலகளாவிய சுற்றாடல் வசதிகள் நிதியம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சியான இயற்கை மாசுபடுத்திகள் அல்லது பாதரசம் கொண்ட பொருள்களை இலங்கை உற்பத்தி செய்வதில்லை என்ற போதிலும் இந்த வகையான உள்ளீடுகளைக் கொண்ட பல பொருள்கள், ஒவ்வொரு ஆண்டும், பல்வேறு பயன்பாடுகளுக்காக, நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

கடுமையான விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், இந்த ஒழுங்குமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் திறன் இல்லாமையால் இரசாயன இறக்குமதிகள் தொடர்ந்தும் தவறாக நிர்வகிக்கப்படுவதாக இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# உத்தேச மின் கட்டணத் திருத்தம் வாய்மூல கருத்துக் கோரல் இன்று

2024 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் உத்தேச மின் கட்டணத் திருத்தம் தொடர்பான மக்களின் வாய்மூலக் கருத்துக் கோரல்கள் இன்று இடம்பெறவுள்ளன எனப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இன்று முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 4.30 வரை பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இந்தக் கருத்துக் கோரல்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன என அந்த ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பான எழுத்து மூலக் கருத்துக் கோரல்கள் நேற்றுடன் நிறைவு பெற்றுள்ளன.

# பட்டாசும் பாற்சோறும் பாழாய்ப் போயின; சிறு தோட்டம் கேட்டு ஒன்றிணைவோம்!

## முன்னாள் எம். பி. திலகராஜ் பொது அழைப்பு

(பொகவந்தலாவ நிருபர்: எஸ்.சதீஸ்)

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா நாள் சம்பளத்தை அரசாங்கம் பரிந்துரை செய்த போதே அதனை வெற்றி என பட்டாசு போட்டோம், பாற்சோறு பகிர்ந்தோம். பின்னர் நீதிமன்றம் துரைமார் சம்மேளன மனுவை விசாரணைக்கு எடுக்காத போதும் பட்டாசும் பாற்சோறு என கொண்டாடினோம். இப்போது உயர் நீதிமன்றம் வர்த்தமானிக்கு இடைக்காலத் தடை விதித்துள்ள நிலையில் வாங்கி வைத்த பட்டாசும் பாற்சோறும் பாழாய்போயுள்ளன. இந்தப் பாழாய்ப் போன பழைய கூலி முறைக்குள் தலைமுறைத் தலைமுறையாக மக்களை அடமானம் வைக்காது, தென்பகுதியைப் போல மலையகப் பெருந்தோட்டப் பகுதியிலும் சிறு தோட்ட முறைமையை நடைமுறைப்படுத்தக் கோரும் ஒற்றைக் கோரிக்கையை ஒருமித்த கோரிக்கையாக முன் வைத்து வென்றெடுப்பதே நிரந்தரத் தீர்வுக்கு வழியாகும். அதற்காகவே அனைத்து மலையக அரசியல் தரப்புகளும் ஒன்றிணைய வேண்டும். 1,700 ரூபா நாள் கூலிக்காக அல்ல என மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் நாள் கூலி 1,700 ரூபா என அறிவித்து அரசாங்கம் வெளியிட்ட வர்த்தமானியை நடைமுறைப்படுத்த உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ள நிலையில் அவர் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாள் கூலிப் போராட்டத்துக்கு நீண்ட வரலாறு உண்டு. 10 சதம் முதல் 1,700 ரூபா வரை அது நாள் கூலிப் போராட்டமாகவே தொடர்ந்து வருகிறது. ஆனால், பெருந்தோட்டக் கட்டமைப்பானது சிறு தோட்ட உடமையாக தென்பகுதி நோக்கி நகர்த்தப்பட்டு 75 சதவீத தேயிலை ஏற்றுமதி சிறுதோட்ட முறைமையில் இருந்தே பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

இன்னும் 25 ஆண்டுகளில் பெருந்தோட்ட முறைமையை முற்று முழுதாக இல்லாமல் செய்து 100 வீத சிறு தோட்ட உடமையாக்கலை நடைமுறைப்படுத்த அரசு தேசிய கொள்கை வகுத்துச் செயற்பட்டு வருகிறது.



ஆனால் மலையகப் பெருந்தோட்ட அரசியல் தொழிற்சங்க தரப்பினர் பாரம்பரியமாக நாள் கூலிக் கோரிக்கையை விட்டு வெளியே வராமல் மலையகப் பெருந்தோட்ட சமூகத்தை கூலிச் சமூகமாவே நிரந்தரமாகப் பேணுவதைக் கொள்கையாகக் கொண்டுள்ளனர். அதற்காக அனைவரும் தமக்கு ஒத்துழைப்பும் வழங்க வேண்டும் ஏனைய அரசியல் தொழிற்சங்கத் தரப்புகளைக் கோரியும் வருகின்றனர்.

மலையகத்தில் மாற்று அரசியல் கொள்கைகளை முன்வைத்து செயற்படும் அரசியல் செயற்பாட்டுத் தளம் என்ற வகையில் கூலிக் கோரிக்கைக்குள் மாத்திரமே ஒரு சமூகத்தின் கோரிக்கையை மட்டுப்படுத்தி வைப்பதனை விமர்சன ரீதியாக எதிர்கொண்டு, தென்பகுதி சிங்கள மக்களுக்கு வழங்கப்படுவது போன்று மலையகத் தமிழ்த் தொழிலாளர்களையும் சிறு தோட்ட உடமையாளர்களாக்கு எனும் கோரிக்கையை அரசியல் கோரிக்கையாக வலுவாக மலையக அரசியல் அரங்கம் முன்வைக்கினறோம். கூலிக் கோரிக்கையாக முன்வைக்கப்படும் போது தொழிற்சங்க - தொழில் திணைக்கள- சட்டப் பிரச்சினையாக முதலாளிமார் சம்மேளனத்துடன் முடிச்சுப் போட்டுக் படும் இந்த விடயம் எமது முன்னெடுப்பில் அரசு - இறைமை - காணி உரிமை - வாழ்வாதாரம் - அரசு என அரசியல் பரிமாணம் பெறுகிறது.

ஒரு சமூகத்தை அரசியல் ரீதியாக பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் தலைமைகள் தமது கோரிக்கைகளை அரசியல் ரீதியாக முன்வைக்க வேண்டுமேயன்றி தொடர்ந்தும் கூலிக் கோரிக்கையையே முன்வைத்து தமது மக்களை தொடர்ந்தும் நாள் கூலிகளாகவே காட்ட முனைவது முதலில் நிறுத்தப்படல் வேண்டும்.

மலையக அரசியல் அரங்கம் தவிர்ந்த ஏனைய அமைப்புகள் சிறு தோட்ட உடைமை முறைமை இத்தகைய அரசியல் கொள்கை நிலைப்பாட்டுடனல்லாது தமது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காகவும் தேர்தல் அரசியல் நிகழ்ச்சி நிரலாகவும் முனவைப்பதையே அவதானிக்க முடிகின்றது.

கடந்த பொதுத் தேர்தலில் சிறுதோட்ட உடமை பற்றிப் பேசிய இ.தொ.கா. அமைச்சுப் பதவி பெற்றதன் பின்னர் அது பற்றி பேசுவதாக இல்லை. எனவே அது அவர்களது உள்ளார்ந்த எண்ணம் இல்லை என்பது தெரிகிறது. அதே போல சஜித் பிரேமதாஸ ஜனாதியானால் சிறு தோட்ட உடமையாக்குவோம் என்பதாக இந்த விடயத்தைத் தேர்தலுக்கு மாத்திரம் தமிழ் முற்போக்குக் கூட்டணி மட்டுப்படுத்திக் கொண்டுள்ளது.

சஜித் வெற்றிபெறாவிட்டால் இவர்களது கோரிக்கை என்னவாகும்? தனது ஆட்சியில் மலையகப் பெருந்தோட்டங்கள் சிறு தோட்ட உடமையாக்கப்படும் என எதிர்கட்சித் தலைவர் சஜித் கடந்த வாரமும் கூறியுள்ளார். அது அவரது உறுதியான நிலைப்பாடு எனில் இப்போது எதிர்கட்சி சார்பில் நாடாளுமன்றில் ஒரு பிரேரணையை முன்வைக்க வேண்டும். அதற்குத் தமிழ் முற்போக்குக் கூட்டணி அழுத்தம் கொடுக்க தமது நாடாளுமன்ற அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டுமேயன்றி நாடாளுமன்றத்துக்கு வெளியே எதிர்கட்சித் தலைவருடன் ஒப்பந்தம் கைச் சாத்திடுவதில் எந்தப் பலனும் இல்லை.

பதுளை மாவட்ட எம்.பி. வடிவேல் சுரேஷ் ஜனாதிபதியின் ஆலோசகராகவும் உள்ளார். அவர் தனது ஆலோசனையில் நாள் கூலி வர்த்தமானிக்கு வெளியேயும் தனது ஆலோசனையை முன்வைக்கலாம்.

மேற்படி பதவி நிலைகள் எதிலும் இல்லாத போதும் மலையக அரசியல் அரங்கம் மக்கள் மத்தியில் சிறு தோட்ட உடமையாதலின் அவசியத்தை உணர்த்தும் பிரச்சார இயக்கத்தை முன்னெடுத்து வருவதுடன் அரச கொள்கை வகுப்பாளர்களை அணுகி எமது கோரிக்கையை முன்வைத்து வருகிறோம். அண்மையில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற மறுசீரமைப்புக்கான கலந்துரையாடலிலும் இதனை வலியுறுத்தி இருந்தோம்.

எனவே கூலித்தொகை 1,700 ரூபா கேட்டு, அதனைக் கொண்டாடி, பட்டாசு கொளுத்தி, பாற்சோறு பகிர்வதை விடுத்து ஆக்கபூர்வமான செயற்பாட்டு சிந்தனைத் தளத்துடன் கூடியதாக சிறு தோட்ட உடமையாதல் கோரிக்கையை ஒற்றைக் கோஷமாகவும் ஒருமித்த கோரிக்கையாகவும் முனவைத்து வெற்றி பெற ஒற்றுமைப் பட வேண்டிய விடயம் இதுவேயாகும். கூலிக் கோரிக்கை அல்ல. - என்றும் தெரிவித்துள்ளார்



# அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தினால் பெறுமதி சேர் வரியை மீள அதிகரிக்க நேரிடும்

## திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவிப்பு

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு வழங்க வேண்டுமாயின், தற்போதைய 18 வீத பெறுமதி சேர் வரியை 20 வீதம் தொடக்கம் 21 வீதமாக அதிகரிக்க நேரிடும் எனவும் அரசாங்கத்தினால் அத்தகைய கோரிக்கையை நிறைவேற்ற முடியாது என்றும் திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்தார்.

அரச சேவை தொழிற்சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் திறைசேரி செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரச சேவையுடன் தொடர்புடைய பல தொழிற்சங்கங்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுத்துள்ள தொழில்சார் நடவடிக்கை தொடர்பில் இக்கலந்துரையாடலில் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன், தொழிற்சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு வழங்கக்கூடிய சாதகமான தீர்வுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்த வருடம் சம்பள அதிகரிப்பை வழங்கும் சாத்தியக்கூறுகள் இல்லா விட்டாலும் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை மீளாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவின் பரிந்துரைகளைக் கருத்திற் கொண்டு திருத்தம் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படுமாயின் தற்போது அரசுக்கு இருக்கும் செலவீனத்திற்கு மேலதிகமாக வருடாந்தம் 140 பில்லியன் ரூபா தேவைப் படுவதாகவும், 20 ஆயிரம் ரூபாவால் சம்பளம் அதிகரிக்கப்பட்டால் மேலும் 280 பில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் திறைசேரி செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வருமானத்தைப் பெறுவதற்காக தற்போதைய வருமானத்தை அதிகபட்சமாக நிர்வகித்தாலும், வரிகளும் அதிகரிக்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்டிய அவர், சம்பளத்தை பத்தாயிரம் ரூபாவினால் அதிகரிக்க, பெறுமதி சேர் வரி 2 வீதத்தினால் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், தொழிற்சங்கங்கள் கோரும் சம்பளத்தை அதிகரிப்பதற்கு 3 வீதத்திற்கும் மேல் பெறுமதி சேர் அதிகரிக்க வேண்டும் என சுட்டிக்காட்டிய அவர், தற்போது அதை செய்ய இயலாது எனவும் ஏற்கனவே பெறுமதி சேர் வரி 18 வீத உச்ச அளவில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளால் முன்பு போன்று மத்திய வங்கியினால் பணம் அச்சிட முடியாது என சுட்டிக்காட்டிய திறைசேரி செயலாளர், அவ்வாறு செய்தால் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்கவும் இங்கு கருத்துத் தெரிவித்ததோடு, அரச ஊழியர்களின் சம்பளத்தை இந்த வருடம் மீண்டும் அதிகரிப்பது கடினமான பணியாக இருந்தாலும், அடுத்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் அதற்கான ஒதுக்கீட்டை வழங்குவதாக ஜனாதிபதி தெளிவாக கூறியுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சம்பள முரண்பாடுகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க விசேட நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இக்கலந்துரையாடலில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகள் சிலரும் கலந்துகொண்டனர்.

# மேலும் பல துறைகளுக்கு வரி அறவீடு செய்ய திட்டம்

இதுவரையில் கவனம் செலுத்தப்படாத 14 துறைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி அவற்றிலிருந்து வரி அறவீடு செய்யவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கேகாலையில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வரியைச் செலுத்தாமல் இருக்க எவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனவும், வரி செலுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்பட்ட காலம் இதுபோன்று இதுவரை இருந்ததில்லை என்றும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டுள்ளார்.




# வருட இறுதிக்குள் பொதுப் போக்குவரத்து சேவைகளுக்கான இலத்திரனியல் பயணச்சீட்டு முறை அறிமுகப்படுத்தப்படும்

## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் தகவல்

இந்த வருட இறுதிக்குள் ரயில்கள் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்து சேவைகளில் பயணச்சீட்டுக்குப் பதிலாக இலத்திரனியல் முறைமை அறிமுகப் படுத்தப்படும் எனப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் கங்கநாத் ரூபசிங்க தெரிவித்தார்.

'இரண்டு வருட முன்னேற்றமும் எதிர்காலமும்' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் கங்கநாத் ரூபசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் 2022 ஆம் ஆண்டுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்கு 390 பில்லியன் ரூபாவை அரசாங்கம் வழங்கியுள்ளதாகவும், 300 பில்லியன் ரூபாவை ஒப்பந்தக்காரர்களுக்காகவும் 90 பில்லியன் ரூபாக் கடனை செலுத்துவதற்காகவும் செலவிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் கங்கநாத் ரூபசிங்க –

"நாடு எதிர்நோக்கிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் 2022 ஆம் ஆண்டுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்கு மாத்திரம் கடந்த இரண்டு வருடங்களில் 390 பில்லியன் ரூபாவை அரசாங்கம் வழங்கியுள்ளது. அந்த பணத்தில் 300 பில்லியன் ரூபா ஒப்பந்தக்காரர்களுக்காகவும் 90 பில்லியன் ரூபா கடனை செலுத்துவதற்காகவும் செலவிடப்பட்டுள்ளது.

மேலும் அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் வெற்றியானது, நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது என்பதைக் கூற வேண்டும். இதன் மூலம் கடந்த பொருளாதார நெருக்கடியின் போது இடைநடுவில் நிறுத்தப்பட்ட பல திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க முடிந்துள்ளது. குறிப்பாக, மத்திய அதிவேகப் பாதையின் முதல் கட்டத்தை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், மத்திய அதிவேகப் பாதையின் 02 ஆம் மற்றும் 03 ஆம் கட்டம், ருவன்புர அதிவேகப் பாதைத் திட்டம் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளமையுடன், நிதி முதலீடுகளின் ஊடாக அதுருகிரிய தூண்களின் மேல் அமைக்கப்படும் அதிவேகப் பாதைத் திட்டத்தை நிறைவு செய்வது தொடர்பில் இருதரப்பு கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. இதற்காக அரச, தனியார் கூட்டு முதலீடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

மேலும், இந்த வருட இறுதிக்குள் ரயில்கள் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்து சேவைகளுக்கான பயணச்சீட்டு வழங்க இலத்திரனியல் முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அதிவேகப்பாதைகளில் கட்டணம் அறவிடலும் சில மாதங்களில் இலத்திரனியல் முறைமைக் கட்டமைப்பிற்குள் உள்வாங்கப்படும்.

இலகு ரயில் திட்டத்திற்கான முதலீடுகளை மேம்படுத்துவது குறித்து ஜப்பான் அரசாங்கத்துடன் ஆரம்பகட்ட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. மேலும், பல புதிய திட்டங்களுக்காக சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம். அதன்படி, அடுத்த ஐந்தாண்டுகளில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையை 10 வீதம் –15 வீதம் என்ற வேகத்தில் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது." – என்றார்.






# அநீதியாக முன்னெடுக்கப்படும் வேலைநிறுத்தங்களால் பிள்ளைகள் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்துள்ளனர்

## தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவிப்பு

“தேர்தல் நெருங்கும் நேரத்தில் அநீதியான வகையில் வேலைநிறுத்தங்களை முன்னெடுப்பதன் மூலம் பிள்ளைகள் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்துள்ளனர். இந்த வேலைநிறுத்தங்கள் மற்றும் போராட்டங்கள் மூலம் மக்களின் நிம்மதியான வாழ்க்கை நிலையை சீர்குலைப்பதுதான் நோக்கமா என்ற கேள்விக்கு எதிர்க்கட்சிகள் பதில் அளிக்க வேண்டும்.”

– இவ்வாறு என தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“2022 ஆம் ஆண்டிலிருந்து, நமது அமைச்சினால் பாரிய அளவில் பல்வேறு கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டன. நாடாளுமன்றத்தில் பல சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையுடன், மேலும் சில சட்டமூலங்களை முன்வைக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், உலக வங்கியின் ஆதரவுடன், 2020-2030 டிஜிட்டல் பொருளாதாரத் திட்டம் வெளியிடப் பட்டது. தற்போதைய 03 பில்லியன் அமெரிக்க டொலர் டிஜிட்டல் பொருளாதாரத்தை 2030 ஆம் ஆண்டிற்குள் 30 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதே எமது நோக்கமாகும்.

நாளை (இன்று) நாடாளுமன்றத்தில் தொலைத்தொடர்பு சட்டத்தில் திருத்தங்களை முன்வைக்க எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சட்டத்தை 28 ஆண்டுகளுக்குப் பிறகு திருத்த எதிர்பார்க்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நுகர்வோரைப் பாதுகாப்பதுடன் தொலைபேசி நிறுவனங்களுக்கு இடையிலான போட்டியை நியாயமான போட்டியாக மாற்றுவது இதன் நோக்கங்களில் ஒன்றாகும். முன்பு, இந்தச் சட்டம் தொலைத்தொடர்பு கட்டமைப்பு அனுமதிப்பத்திரத்திற்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருந்தது. அதன்படி, திருத்தங்களுக்கு அங்கீகாரம் கிடைத்தவுடன் அனுமதிப்பத்திரம் வழங்கும் பொறிமுறையும் மாற்றம் அடையும்.

மேலும், எதிர்காலத்தில் செய்மதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இணைய வசதிகளை வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. கடல்வழி கேபிள் சேவைக்கான அனுமதிப் பத்திரம் மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கு நாங்கள் தயாராகி வருகிறோம். இந்த ஆண்டு தொழில்நுட்ப மேம்பாட்டுச் சட்டத்தை முன்வைக்கவும் எதிர்பார்க்கின்றோம்.

மேலும், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க ஆணைக் குழுவை நிறுவவும் எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு செய்வதன் மூலம், நாட்டின் அனைத்து அபிவிருத்தி மற்றும் புத்தாக்கங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படும். ஆராய்ச்சி, வணிகமயமாக்கப்படுவதுடன் பரிநதுரைகளை வழங்குவதும் இதன் மூலம் முன்னெடுக்கப்பட உள்ளது.

மேலும் தற்போதைய தொழில்சார் நடவடிக்கைகளின்படி அனைத்து அரச ஊழியர்களுக்கும் 20,000 ரூபா கொடுப்பனவு கோரப்பட்டுள்ளது. அந்த கொடுப்பனவை வழங்குவதற்கு வருடத்திற்கு சுமார் 280 பில்லியன் ரூபா மேலதிகமாக செலவு செய்ய வேண்டியிருக்கும். நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு அந்த செலவுகளை எவ்வாறு ஈடுகட்டுவது என்பதை எதிர்க்கட்சி தெரிவிக்க வேண்டும்.

அத்துடன், தேர்தல் நெருங்கும் வேளையில் அசாதாரண வகையில் போராட்டங்களை முன்னெடுத்தமையினால், பிள்ளைகள் கல்வி கற்கும் வாய்ப்பையும் இழந்துள்ளனர். இறுதியில் சாதாரண பொது மக்களே பாதிக்கப்படுகின்றனர் என்பதை வேலை நிறுத்தத்தில் ஈடுபடுபவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

குறைந்த வருமானம் பெறும் மக்களுக்காக இவ்வருடம் 11 பில்லியன் ரூபா வழங்க வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் பரிந்துரை செய்துள்ளது. இந்தப் போராட்டங்கள் மூலம் மக்களின் நிவாரண வாழ்வாதாரத்தை சீர்குலைக்க எதிர்க்கட்சிகள் எதிர்பார்க்கின்றனரா என்ற கேள்விக்கு எதிர்க்கட்சிகள் பதில் அளிக்க வேண்டும்.”– என்றார்.



# புத்தரின் போதனைகளில் உள்ள விடயங்கள் தான் உலகில் புதிய சிந்தனைகளாக முன்வைக்கப்படுகின்றன

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“பௌத்த மதத்திற்கும் நாம் தற்போது பயணித்துக்கொண்டிருக்கும் நவீன விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப உலகிற்கும் இடையில் பாரிய தொடர்பு இருக்கின்றது. உலகம் எதிர்நோக்கும் எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் வழி புத்தரின் போதனைகளில் உள்ளடங்குகின்றது.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கை அமரபுர மகா நிகாயவின் அமரபுர தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வண. வெலிதர, மஹகராவே ஞான விமலதிஸ்ஸ தேரரின் மாபெரும் அர்ப்பணிப்பின் பின்னர் 1802 ஆம் ஆண்டு அமரபுர மகா நிகாய ஸ்தாபிக்கப்பட்டது. வண. மடிஹே பஞ்ஞாசீஹ, அக்கமஹா பண்டித வண. பலாங்கொட ஆனந்த மைத்ரி, வண. தவுல்தென ஞானீஸ்வர, வண. கொடுகொட தம்மாவாஸ, வண. தொடம்பஹல சந்தசிறி போன்றவர்கள் அமரபுர மகா நிகாயவை தலைமை தாங்கினர்.

222 வருடங்களாக புத்த சாசனத்திற்காக பெரும் பணியை ஆற்றிய அனைவரையும் நினைவுகூரும் வகையில் அமரபுரதினம்அனுஷ்டிக்கப்படுகின்றது. சப்ரகமுவ அமரபுர சாமகிரி சங்க சபையினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கை அமரபுர மகா நிகாயவின் தலைவர், பதில் வண. கரகொட, உயங்கொட மைத்ரி மூர்த்தி மகாநாயக்க தேரர் நிகழ்விற்கு தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்வில் அமரபுர மகா நிகாயவை பிரதிநிதித்துவப்படுத்தும் 22 பீடங்களின் மகாநாயக்க தேரர்களும் பிரசன்னமாகியிருந்ததுடன் அவர்களுக்கு ஜனாதிபதியினால் கௌரவிக்கப்பட்டு நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கான பணியைப் பாராட்டி, அமரபுர பீடத்தின் அனைத்து தரப்பினரும் ஆசிர்வதித்து ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது. இதற்கு இணையாக, சப்ரகமுவ மாகாண ஆளுநர் சட்டத்தரணி நவீன் திஸாநாயக்கவுக்கு, இலங்கை அமரபுர மகா சங்க சபையின் தலைவர் வண. கரகொட உயங்கொட மைத்ரிமூர்த்தி தேரரால், ‘ஜனஹிதகாமீ சாசனபந்து’ என்ற கௌரவப் நாமம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின்போது ஜனாதிபதி மேலும் கருத்து தெரிவிக்கையில் –

“அமரபுர மகா நிகாய ஸ்தாபிக்கப்பட்ட பின் , முன்னர் செயற்பட்டவர்களை நினைவு கூர்வது சம்பிரதாயமாக நடைபெறுபெறுகின்றது. அமரபுர நிகாய நவீன இலங்கையின் வரலாற்றின் ஒரு பகுதியாகும். இந்த அரமரபுர மகா நிகாய நமது மஹகராவே ஸ்ரீ ஞான விமலதிஸ்ஸ தேரரின் முயற்சியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நாட்டில் ஏற்பட்ட பௌத்த மறுமலர்ச்சியையும், சிங்கள இயக்கத்தின் பலத்தையும் ஒருங்கிணைத்து, 20 ஆம் நூற்றாண்டில், மதம், அரசியல் மற்றும் சமூகம் என்ற அனைத்து துறையினதும் கருத்தை பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கையின் சமூகக் கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டது.

அமரபுர மகா நிகாய ஆற்றிய சேவை மிகவும் முக்கியமானதாக கருதப்பட வேண்டும். இந்த நாட்டின் வரலாற்றை உருவாக்குவதற்கான ஒரு சக்தியாக அமரபுர நிகாயவைக் குறிப்பிடலாம்.

இன்று நாம் அறிவியல் மற்றும்

தொடர்ச்சி▼








# புத்தரின் போதனைகளில் உள்ள விடயங்கள் தான் உலகில் புதிய சிந்தனைகளாக முன்வைக்கப்படுகின்றன

தொடர்ச்சி▲

தொழில்நுட்ப உலகில் வாழ்கிறோம். இன்று உலகம் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு மாறிவிட்டது. குறிப்பாக உலகம் முழுவதும் செயற்கை நுண்ணறிவில் கவனம் செலுத்தும்போது நாமும் அதில் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்த 05-10 ஆண்டுகளில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திற்கும் மனதிற்கும் இடையிலான தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும். புத்த மதத்துக்கும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துக்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து ஆய்வுகளை மேற்கொள்வதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் ஆரம்பிக்குமாறு தொழில்நுட்ப அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன். மகா சங்கத்தினருடனும், பொது மக்களுடனும் கலந்துரையாடி இப்பணிகளைத் தொடர எதிர்பார்க்கின்றோம்.

இன்று நாம் ஒரு சமூகமாக முன்னேற வேண்டும். அதன்போது நாம் பின்வாங்க முடியாது. அனுராதபுர சகாப்தம் நமது நாட்டின் புகழ்பெற்ற சகாப்தமாக கருதப்படுகிறது. அநுராதபுர காலத்தில், மகாவிகாரை, ஜேதவனாராம மற்றும் அபயகிரிய போன்ற முக்கிய விகாரைகள் தோன்றின. அப்போது, பொது மக்கள், பௌத்த துறவிகளும் உட்பட அனைவரும் இந்தப் பிரிவெனாக்களில் கல்வி கற்றனர்.

மஹாசேய, ஜேதவானாராம, அபயகிரிய போன்ற பாரிய அற்புதங்களை நிர்மாணிக்கும் அறிவை எமது மக்கள் இப்பிரிவெனா கல்வியின் மூலம் பெற்றனர் என்பதைக் கூற வேண்டும். மேலும், தற்போதைய பொறியாளர்களையும் ஆச்சரியப்படுத்தும் நமது சிறந்த நீர்ப்பாசன கலாசாரமும், சீகிரியா போன்ற சிறந்த படைப்புகளும் பிரிவெனா கல்வி முறையால் உருவானது.

நவீன அறிவையும் இந்த சிறப்புகளையும் இணைத்துக்கொண்டு ஒரு நாடாக நாம் முன்னேற வேண்டும். இன்று, உலகின் கவனம் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் மீது குவிந்துள்ளது. புத்தரின் போதனைகளில் கால நிலை மாற்றத்தை எதிர்கொள்ளத் தேவையான அறிவு உள்ளது.

சுற்றுச்சூழலை பாதுகாப்பது பற்றி சிறுவயதிலிருந்தே நாம் கற்றுக் கொண்டோம் இன்று உலகம் முன்வைக்கும் புதிய சிந்தனைகள் புத்தரின் போதனைகளில் இடம் பெற்றுள்ளன.

இன்று நாம் அறிவியலும் மதமும் ஒன்றாகச் சந்திக்கும் ஒரு கட்டத்தில் இருக்கிறோம். அரசாங்கம் என்ற வகையில், புத்தரின் போதனைகளுக்கும் திரிபிடகத்திலும் இன்றைய விஞ்ஞான உலகிலும் உள்ள உண்மைகளுக்கும் இடையே உள்ள தொடர்பை ஆராய்வதில் நமது கவனம் குவிந்துள்ளது. இதை அரசாங்கத்தால் மாத்திரம் செய்ய முடியாது, அனைவரும் ஒன்றிணைந்து இப்பணிகளை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும்.மேலும், தற்போது மகாவிகாரையில் அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக பிரித்தானியாவில் உள்ள டர்கெம் பல்கலைக் கழகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்." - என்றார்.













# வீதியையும் பாலத்தையும் புனரமைக்கக் கோரி பெயாவெல் தோட்ட மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

அட்டன் - நுவரெலியா பிரதான வீதியிலிருந்து தலவாக்கலை பெயாவெல் தோட்டத்திற்கு செல்லும் பிரதான வீதி மற்றும் பாலத்தை புனரமைக்ககோரி அத்தோட்டத்தைச் சேர்ந்த 100 இற்கும் அதிகமான மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இந்த வீதி கடந்த 20 வருடங்களுக்கு மேலாக புனரக்கப்படாத காரணத்தினால் குண்டும் குழியுமாக காணப்படுகின்றது. மேலும் அத்தோட்டத்திற்கு செல்வதற்காக அமைக்கப்பட்ட பழமை வாய்ந்த பிரதான இரும்பு பாலம் ஒன்று காணப்படுகிறது. இப்பாலம் 200 அடி நீளமும் மூன்று அடி அகலமும் கொண்டதாகும். பாலம் பழுதடைந்த நிலையில் காணப்படுவதோடு ஆங்காங்கே உடைந்தும் காணப்படுகிறது. இதனால் இத்தோட்டத்தை சார்ந்த 800-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பாலத்தை கடக்கும் போது உயிர் அச்சுறுத்தலோடு செல்கின்றனர்.மேலும் இவ்வீதி ஊடாக முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட ஏனைய வாகனங்களும் செல்கின்றன.

இத்தோட்டத்தில் இருந்து 100க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களும் இப்பாலத்தையே நாள்தோறும் கடந்து செல்கின்றனர்.கடந்த காலங்களில் இப்பாலத்தில் சென்றவர்கள் பலர் தவறி விழுந்தனர் எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். பாலத்தில் பாரிய அளவிலான துவாரம் ஏற்பட்டுள்ளதால் இரவு நேரங்களில் மக்கள் இப்பாலத்தை கடக்கும் போது பல்வேறு இடர்களைச் சந்திக்கின்றனர் எனவும் குறிப்பிடுகின்றனர்.

அதேவேளை தேர்தல் காலங்களில் வாக்குகளைப் பெற்றுக்கொண்ட அரசியல்வாதிகள் தற்போது மக்களுடைய பிரச்சனைகளைக் கண்டுக் கொள்வதில்லை எனவும் ஆர்ப்பாட டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

பெயாவல் பாலத்தில் அணிதிரண்ட மக்கள் பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியும் தமது எதிர்ப்பினை தெரிவித்தனர்.

உடனடியாக பாலத்தைத் திருத்தித் தருமாறு கோரிக்கை விடுப்பதோடு, யார் இந்தப் பாலத்தை செய்கின்றார்களோ அவர்களுக்குத் தான் இத் தோட்ட மக்கள் வாக்களிப்போம், அவ்வாறு வாக்களிக்கத் தகுதி உள்ளவர்கள் நாங்கள், எனவே வீதியை புனரமைக்க முடியாத பட்சத்தில் எவருக்கும் வாக்களிக்கப் போவதில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் எச்சரித்துள்ளனர்.

சுமார் 2 மணி நேரம் பிரதான பாலத்தில் நின்றவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்..

# தங்கபுரம் யுவதி படுகொலை காதலன் பொலிஸில் சரண்!

(எஸ்.கீதபொன்கலன்)

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளிவெட்டி கிராமத்தில் உள்ள பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து, படுகொலை செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட தங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த யுவதியின் காதலனான,பிரதான சந்தேக நபர்,மூதூர் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் சரணடைந்தார். இவர் நேற்றைய தினம் மூதூர் நீதிமன்றில்முன்னிலைப்படுத்தப்பட்டார். இன்று வரை இவரைப் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை ஆறு சந்தேக நபர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். இவர்களை. கடந்த சனிக்கிழமை மூதூர் நீதிவான் முன் முன்னிலைப்படுத்திய போது எதிர்வரும் 19ஆம் திகதி வரை அனைவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு வழங்கப்பட்டது.

இந்நிலையிலேயே குறித்த பிரதான சந்தேக நபரான படுகொலை செய்யப்பட்ட யுவதியின் காதலன் நேற்று முன்தினம் மூதூர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

இதுவரை குறித்த யுவதியின் காதலன்,அவரின் தந்தை, சகோதரி, அவரது வீட்டில் வேலை செய்தவர் மற்றும் கனரகவாகன சாரதி இருவர் ஆகிய ஏழுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சேருவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் கிராமத்தைச் சேர்ந்த நடேஸ்குமார் வினோதினி (வயது 25) என்ற யுவதி காணாமல் போயிருந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை பாழடைந்த கிணறு ஒன்றில் கல்லோடு கட்டி போட்டிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இதன்போது அவருடைய ஆவணங்கள் அடங்கிய கைப்பை, உடைந்த தலைக்கவசம் என்பனவும் மீட்கப்பட்டிருந்தன.

இந்தச்சடலம்பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தபோது தலைப் பகுதி தாக்கப்பட்டு மண்டையோடு உடைந்திருந்ததாகவும், தலையின் பிற்பகுதியில் பாரிய துளை இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் காதலனின் வீட்டில் இருந்து தாக்குதலுக்கு பயன்படுத்தியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இரும்புக்குழாய் உட்பட சில சான்றுப் பொருள்களையும் மீட்டுள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.07.2024




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று சில விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண அதனை தவிர்த்தல் நல்லது.வீட்டுப் புனரமைப்புக்காக பணம் செலவு செய்ய நேரலாம். தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடும் சூழல் ஏற்படும். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள்வீர்கள். புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள் வலி ஏற்படலாம். தியானப் பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கலாம். தைரியம் மற்றும் உறுதி கொண்டால் நன்மை கிடைக்கும். இன்று மொத்தத்தில் வளர்ச்சி கிடைக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

நீங்கள் புத்துணர்ச்சியோடு வேலையை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டமான நாள். பண வரவு காணப்படும்.

உங்கள் மன வலிமை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று நீங்கள் உற்சாகத்துடன் இருக்க வேண்டும். அதிக சிந்தனைகளை தவிர்க்க வேண்டியது அவசியம். ஆன்மீகத்தில் ஈடுபட்டு அமைதி காணலாம்.

அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. உங்கள் பொறுப்புகளை ஆற்றும் போது கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் எரிச்சலும் கோபமும் அடைவீர்கள். எனவே உங்கள் பிரியமானவரிடம் நட்பு முறையோடு பழகுவது நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. நிதி நிலைமையை மோசமாக்கக்கூடிய வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருப்பது நல்லது. இன்று தெளிந்த மனதுடன் இருந்தால் உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் உள்ள கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.இதனால் குழப்பம் ஏற்படும். உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவினங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். சிறிது பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது.இன்று முதுகுவலி வருவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்கள் சுமுகமாக நடக்க அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயற்பட்டால் வெற்றி காணலாம்.

அதிக பணிகளை சந்திக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடன் சகஜமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் புரிந்துகொண்ட மனநிலையோடு பழக வேண்டும்.நிதிநிலைமை சீராக இருக்காது. இன்றைய செலவினங்களை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று மகிழ்ச்சியளிக்கத்தக்க வகையில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் எதிர்காலத்தைப் பற்றிய பரந்த நோக்கு காணப்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய கடினமாக உழைப்பீர்கள். உங்கள் வழியில் வரும் தடைகளை தகர்த்தெறிவீர்கள்.

நீங்கள் பலனை அதிகம் எதிர்பார்க்காமல் பணியாற்றுவீர்கள். இதனால் குறித்தநேரத்தில் பணிகளை ஆற்றுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டையும் ஆதரவையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பீர்கள். இதனால் இருவரும் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். வங்கியிருப்பு உங்களுக்கு சாதகமான வகையில் பராமரிப்பீர்கள்.




இன்று சுமுகமான பலன்கள் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைய இந்நாளை பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று உங்கள் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் உறுதியானது. இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நம்பிக்கை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். இன்று நிதி வளர்ச்சிக்கு உங்கள் ஆற்றலை பயன்படுத்திக் கொள்ளலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.07.2024




இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். புதிய மனிதர்களின் தொடர்பும் அதனால் நல்ல பயனும் கிடைக்கும். இதனால் உங்கள் தொடர்பு வட்டம் விரிவடையும். வாழ்க்கை உங்களுக்கு கவர்ச்சிகரமாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும். அவைகளை திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடும் விவாதங்களும் காணப்படும். இருவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள்.நிதியைப் பொறுத்தவரை இன்று சுமாரான நாள். பண வரவுக்கும் சேமிப்புக்கும் அதிர்ஷ்டம் குறைவான நாள்.தூக்கமின்மை மற்றும் பதற்றம் காரணமாக தலைவலி காணப்படும்.




இன்று காணப்படும் கடினமான சூழல் காரணமாக தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதன் மூலம் இந்தச் சூழ்நிலைகளை ஜெயிக்கலாம். பிரார்த்தனை நல்ல பலன் தரும்.

பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்களின் குழப்பமான மன உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த எண்ணுவீர்கள். இருவரும் சமமாகப் பழக மகிழ்ச்சியாக நட்புடன் பழக வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். உங்களின் பிரியமான ஒருவரின் உடல் நிலைக்காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று மகிழ்ச்சி அலை வீசும். முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

உங்களின் தனித்தன்மைக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களின் தகவல் பரிமாற்றம் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். புதிய முதலீடுகளுக்கு திட்டமிடலாம்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும்.




இன்று விரும்பிய பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும் வகையில் பயனுள்ள திட்டங்களைத் தீட்டுங்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். பல நன்மைகளை அடைவதற்கான சாத்தியம் உள்ளது. கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண விழாவில் இருவரும் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களின் வாழ்க்கைத் துணைக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.பண வரவு சாதகமாக உள்ளது. உங்களின் சேமிக்கும் ஆற்றல் உயரும், இதனால் பொருளாதார பாதுகாப்பு காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




